[1978 மார்ச் 20

Former Language Pandits.

* 181 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU K. S. GANAPATHI): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the former Hindi and other Language Pandits now working as Junior Assistants in schools have been directed to appear for the S.S.L.C. Examinations in October 1977; and

(*b*) if so, the reasons therefor and the details thereof?

முன்னாள் மொழி ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதில் அளிக்க வேண்டுகிறேன்:

(அ) பள்ளிகளில் தற்போது இளநிலை உதவியாளர்களாகப் பணியாற்றி வரும் முன்னாள் இந்தி ஆசிரியர்களும், ஏனைய மொழியாசிரியர்களும், 1977, அக்டோபரில் எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுத வேண்டுமென உத்திரவிடப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை? அது குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) திருச்சி மாவட்டத்தில் மட்டும் முன்பு இந்தி மற்றும் இதர மொழி ஆசிரியர்களாக பணிபுரிந்து தற்போது இளநிலை உதவியாளர்களாக பணிபுரிபவர்கள் எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுத வேண்டுமென தவருக அறிவுறுத்தப்பட்டனர். இவ்வகை இளநிலை உதவியாளர்கள் எஸ். எஸ். எல். சி. தேர்வு எழுத வேண்டியதில்லையென திருச்சி முதன்மைக் கல்வி அலுவலரால் எல்லாப் பள்ளிகளுக்கும் அறிவிக்கப்பட்டது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: அப்படித் தவருன ஒரு உத்தரவு போடப்பட்டதற்குக் காரணம் என்ன? அரசாங்கத்தின் ஆணை —ஜி. ஓ.— வேறுமாதிரியாக இருக்கும்போது, அங்கே இருக்கிற அதிகாரி இப்படிப்பட்ட ஒரு தவறுதலான உத்தரவு போடுவதற்குக் காரணம் என்ன? இதனுல் பலருக்கு இடையூறுகள் ஏற்பட்டுள்ளன. எனவே இப்படித் தவருன ஒரு உத்தரவைப் போட்டவர் மீது என்ன நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தவறான உத்தரவைப் போட்டவர் மீது முறைப்படி இலாக்கா பூர்வமான நடவடிக்கையை அவர்கள் எடுப்பார்கள்.

Salaries of Teachers of Elementary Schools.

* 182 *Q*.—THIRU M. SANKARALINGAM & THIRU P. R THOMAS: Will the HON. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have received any report that the Educational Officers have directed that the salary of Teachers of the Elementary Schools would be reduced, if those schools failed to work for 220 days on account of their late re-opening after 20 days behind the scheduled time, due to the elections during the year 1977–78; and

(*b*) if so, the action taken thereon?

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுடைய சம்பளங்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் & திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) 1977–78ஆம் கல்வியாண்டில் தேர்தல் காரணமாக 20 நாட்கள் பிந்தி துவங்கப்பட்ட ஆரம்பப் பள்ளிகள் 220 நாட்கள் வேலை செய்யாவிட்டால், ஆசிரியர்களுடைய சம்பளம் குறைக்கப் படும் என்று கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக அரசுக்குத் தகவல் ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (இ) இக்கல்வியாண்டில் எல்லா ஆரம்பப் பள்ளிகளுக்கும் மொத்தப்பள்ளி நாட்கள் 220லிருந்து 20 நாட்கள் வரை தவிர்ப்பு வழங்க ஆணை வெளியிடப்பட்டுவிட்டது.

திரு பி. ஆர். தாமஸ்: அதே நிலையில் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் விதி விலக்கு அளிக்க அரசு முன் வருமா? உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், 200 நாட்கள் வேலை செய்தால் போதும் என்றிருந்தாலும், தேர்தல்கள் காரணமாகவும் புயல் வெள்ளம் காரணமாகவும் சில பள்ளிகளை உடனடியாக திறக்க முடியாத நிலை ஏற்பட்ட காரணத்தால், அத்தகைய விதி விலக்குத் தேவைப்படும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு இந்த விதிவிலக்கு அளிக்க மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.